www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# வீழ்வேனென்று நினைத்தாயோ?

ஞானம் 6 - ஒலி 47 - 03.12.2023

# ஆளுமை அசராது.....





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களும், செபங்களும்.

தைரியமும், மனவுறுதியும், வீரமும் கொண்ட மனிதர்களுக்குத்தான் கடினமான, சவாலான வாழ்க்கை அமைகின்றது. அவர்களிடம்தான் தோல்விகளும், தடங்கல்களும், எதிர்ப்புகளும் அதிகமாகப் படையெடுக்கின்றன. ஏனென்றால், அவர்களிடமுள்ள முழு ஆற்றல்களை வெளிக்கொணர இந்தப் பிரபஞ்சம் அவர்களை உலுக்கி எடுக்கும். அவ்வாறு வரும் எத்தகைய சூழல்களையும் அப்படிப்பட்டவர்கள், சாதாரணமாக ஊதித்தள்ளி சாதனைபுரிவார்கள்.

இப்படிப்பட்ட வாழ்க்கை இங்கு யாருக்காவது அமைந்து, அதற்காக இறைவனிடம் புலம்புபவர்களா நீங்கள்? என்னடா வாழ்க்கை இது எங்கு திரும்பினாலும் எதிர்ப்புகளும், தோல்விகளாயும் இருக்கிறதே என்று சலித்துக் கொள்கிறவரா தாங்கள்? அப்ப நீங்கள்தான் சூப்பர் ஹீரோவாகப் போகின்றீர்கள். அதன் முன்னடையாளம்தான், இப்படிப்பட்ட சூழலிலும் நீங்கள் சமாளித்து முன்னேறிக் கொண்டிருக்கின்றிருப்பது. நீங்கள் உலகை ஆளப்போகின்றீர்கள் என்பதை நினைத்து தலைநிமிர்ந்து செல்லுங்கள். விடு ஜூட்....

அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் ஹோண்டா மோட்டார் கம்பெனியின் உரிமையாளர், திரு.சாய்கிரோ ஹோண்டா அவர்கள். ஜப்பான் நாட்டு இளைஞன். பள்ளியிலும், வெளியிலும் அவரைக் கேலி செய்யாதவர்கள் இல்லை. அதைவிட கொடுமை...அவரின் தந்தையே அவரை முட்டாள் என்றும் அதிர்ஷ்டம் கெட்டவன் என்றும் சதாகாலமும் சாய்கிரோவைத் திட்டிக்கொண்டே இருப்பார். ஆனால், அவர் எதற்கும் சளைக்காமல், எதையும் பொருட்படுத்தாமல் தன் முற்போக்குச் சிந்தனையில் திளைத்திருந்தார். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற பேரார்வம் அவரில் கொழுந்து விட்டுச் சுடரவிட்டது.

கலங்கிய தண்ணீரை ஊற்றினாலும், சாக்கடை நீரை ஊற்றினாலும் மரம் தனது வளர்ச்சியை நிறுத்துவதில்லை, அதன் பசுமையான வளர்ச்சியையும், தரும் கனிகளையும் அது நிறுத்திக் கொள்வதில்லை. அதுபோல, சாய்கிரோ ஹோண்டாவின் வாழ்வை எந்த அவமானங்களும் பாதிக்கவில்லை. 18 வயது நிரம்பிய ஓர்

இளைஞனின் வேகமும், ஆர்வமும் நிரம்பியவராய்த்திகழ்ந்தார்.

தன்னைச் சுற்றி ஏவப்படும் கேலி, கிண்டல்களுக்கு மத்தியில், தன் தந்தையின் எதிர்ப்புகளையும் மீறி, அவர் 1928ம் ஆண்டு, உலோகம் உருக்கும் கூடம் ஒன்றை உருவாக்கினார். காரணம் அவர் வாகன தொழிற்நுட்பத்தில் புரட்சி செய்ய விரும்பினார்.

அவரின் லட்சியம் என்னவென்றால், டொயோட்டா கம்பெனக்கு சிறப்பான புதுமாடல் பிஸ்டன் (உந்துருளி) தயாரித்துத் தரவேண்டும் என்பதே, அதன்படி அவர் இரவு பகலாக உழைத்து, சிந்தித்து, புதுப்புது திட்ட முயற்சிகளின் விளைவாக ஒரு புதிய பிஸ்டன் ஒன்றை தயார் செய்து அதை டொயோட்டா கம்பெனிக்குக் கொடுத்தார். அவர்கள் அதை ஏளனம் செய்து அது தரமற்றது என்று சொல்லி அந்தக் கம்பெனியின் பொறியாளர்கள் நிராகரித்துவிட்டார்கள். அதற்காக செலவிடப்பட்ட பணம், நேரம், உழைப்பு வீணானாலும், தன் இலக்கை அடைய அவர் எப்போதும் போராடியதை நிடிறுத்திக் கொள்ளவில்லை.

உண்மையும், உழைப்பும் வெற்றியை நிச்சயம் தருமல்லவா. அதன்படி, கடுமையான முயற்சிக்குப் பிறகு அவர் ஒரு மிகச்சிறந்த உந்துருளியைத் தயார் செய்து டொயோட்டா கம்பெனிக்குக் கொடுத்தார். அவர்களே வியந்து சாய்கிரோ ஹோண்டா அவர்களைப் பாராட்டி அந்த பிஸ்டனை ஏற்றுக்கொண்டதோடு, அதைத் தயாரித்துக் கொடுக்கும் உரிமையையும் அவருக்கே கொடுத்தார்கள்.


இப்போது அவருக்கு அதைவிட பெரிய சவால், அவர்கள் கேட்கும் பெரும் எண்ணிக்கையிலான உந்துருளிகளைத் தயாரிக்க ஒரு பெரிய தொழிற்கூடம் கட்ட வேண்டும். அந்த சமயத்தில் ஜப்பான் உலக்போருக்குத் தயாராகிக் கொண்டிருந்ததால், சிமெண்ட் தட்டுப்பாடு பெரிதாக இருந்தது. சிமெண்ட் இல்லாது தொழிற்கூடம் சாத்தியமில்லை. சாய்கிரோ எப்போதும் பிரச்னையைத் தாண்டி, அதை எப்படித் தீர்ப்பது என்பதிலேயே கவனம் செலுத்துவார். அதுபோல, இப்போது அவர் சிமெண்டுக்குப் பதிலாக மாற்றுக் கலவையைக் கண்டுபிடித்தார். அதைக்கொண்டு, பலரிடம் கடன் வாங்கி, சில மாதங்களிலேயே தொழிற்கூடத்தைக் கட்டி முடித்தார். உந்துருளி தயாரிக்கும் பணியும் மிகத்தீவிரமாக நடந்தது. உலகப்போரும் ஆரம்பமானது. அந்த சமயத்தில் அமெரிக்கா போட்ட குண்டு ஹோண்டாவின் தொழிற்சாலையின் பெரும் பகுதியை உடைத்து சின்னாபின்னமாக்கியது. சாய்கிரோ சந்திக்காத பிரச்னைகளா....அவன் கதை முடிந்தது என்று அவனது வீழ்ச்சியைக் கொண்டாட நேரம் பார்த்திருந்தார்கள்.

தோல்விகளிலேயே மன விரக்தியடைந்தவர்கள்தான், மற்றவர்ன் வீழ்ச்சியை ரசிப்பார்கள். தான் வாழவில்லை, ஆகவே, யாரும் வாழ்ந்துவிடக் கூடாது என்று எப்போதும் மற்றவரின் அழிவுகளிலிருந்து தங்களின் நிம்மதியைத் தேடியவர்களாய் அவர்கள் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள், யாரும் மகிழ்ச்சியாய் இருப்பதை விரும்பமாட்டார்கள். அப்படியே மற்றவர் மகிழ்ச்சியாய் இருப்பதைக் பொறுக்காதவர்கள், அவர்களை எப்படியாவது அழவைக்க என்னென்ன செய்ய வேண்டுமோ? அவையனைத்தையும் செய்து கொண்டே இருப்பார்கள்.

அவர்கள் முன் நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்தால், எப்போதும் சிரித்த முகத்தோடு இருந்தாலே போதும். அது அவர்களைக் கதிகலங்க வைப்பதைவிட, நமக்குள், தன்னம்பிக்கை பிறக்கும். அதனால்தான், எல்லாரும் ஆச்சரியப்படும்விதமாக, சாய்கிரோ தன் சகத் தொழிலாளர்களின் உதவியோடு, மீண்டும் அந்தத் தொழிற்சாலையை இயக்கிக் காட்டினார். அதைத் தொடர்ந்து நிகழ்ந்த நிலநடுக்கத்தில், ஹோண்டா தொழிற்சாலை தரைமட்டமாகியது. அதனால், அவர், அந்தக் கம்பெனியின் உடைந்த கருவிகள், மூலப்பொருட்கள் அனைத்தையும் டொயோட்டா நிறுவனத்துக்கு கிடைத்த விலைக்கு விற்றுவிட்டார். எதற்கும் சளைக்காத சாய்கிரோ ஹோண்டா...அத்தோடு நிறுத்திவிடவில்லை. ............ தொடரும்..........

# விவிலியம் அறிவோம்





## மரணதண்டனையும் சாட்சியங்களும்
## (இச 19:1-21)

விவிலியத்தில் பல குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. குறிப்பாக, மனித பலி செலுத்துபவர்கள் (லேவி 20:2), ஆண்டவரை இகழ்பவர்கள் (லேவி 24:14), குறி சொல்பவர்கள் அல்லது மைபோட்டுப் பார்ப்பவர்கள் (லேவி 20:27), ஓய்வு நாளை மீறுபவர்கள் (எண் 15:35-36); அழிவுக்குரியவற்றிலிருந்து திருடுபவர்கள் (யோசுவா 7:25), பெற்றோரை மதியாதவர்கள் (இச 21:21), விபசாரிகள் (இச 22:21), நெருங்கிய உறவினரோடும் விலங்குகளுடனும் உடலுறவு கொள்பவர்கள் (லேவி 20:14), வேண்டுமென்றே கொலை செய்பவர்கள் ஆகியோர் மரண தண்டனைக்குரியவர்கள்;. பொதுவாக மரண தண்டனைத் தீர்ப்பு பெற்றவர்கள் கல்லாலெறிந்து கொல்லப்பட்டார்கள். ஆனால் ஒரு சில குற்றங்களுக்கு வேறு வழிகளிலும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. உதாரணமாக, ஒரு சில குற்றங்களுக்கு நெருப்பில் எரிக்கப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. மரணதண்டனையின் நோக்கம் சமூகத்தை மாசுபடுத்தும் கூறுகள் களையப்பட வேண்டும் என்பதுதான். ஏனெனில் இத்தகைய தீமைகள் மக்களை உடன்படிக்கையின் மக்களாக வாழ்வதிலிருந்து வெளியேற்றுகிறது; கடவுள் மீது நம்பிக்கையில்லாதவர்களாக மாற்றுகிறது.

எந்தச் சூழ்நிலையிலும் குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படக்கூடாது என்ற சிந்தனையும் இஸ்ரயேல் மக்கள் நடுவில் வலுவாக இருந்தது. அன்றாட வாழ்வில் ஒரு சிலச் சூழ்நிலைகளில் தற்செயலாக ஒருவர் இன்னொருவரின் சாவுக்குக் காரணமாகலாம். இத்தகையச் சூழ்நிலைகளில் குற்றம் செய்ததாகக் கருதப்படுபவர் விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் தண்டிக்கப்படலாகாது. எனவே அதற்கு வசதியாக ஆண்டவர் அடைக்கல நகர்களை உருவாக்கக் கட்டளையிடுகிறார். எண்ணிக்கை நூல் 35 ஆம் அதிகாரம் அடைக்கல நகர்கள்

பற்றி விரிவாகப் பேசுகிறது. இஸ்ரயேல் மக்களின் வாழ்விடங்களில் ஆறு நகர்கள் அடைக்கல நகர்கள் என ஒதுக்கப்படவேண்டும் என ஆண்டவர் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஒருவர் வேண்டுமென்றே ஒருவரைச் சாகடிக்காமல் தற்செயலாக அவருடைய சாவுக்குக் காரணமானால் கொலையாளியாகக் கருதப்படுகிறவர் தப்பியோடி அடைக்கலநகர் ஒன்றில் தஞ்சம் பெறலாம். இவ்வாறு அடைக்கலம் தேடுவது அவரை இரத்தப் பழி வாங்குவோனிடமிருந்து பாதுகாக்கிறது.

இரத்தப் பழி வாங்குவோன் என்ற சிறப்புப் பெயர் குடும்பத்தில் ஒருவர் கொல்லப்படும்போது அதற்காக இரத்தப்பழி வாங்கவேண்டும் என்ற குடும்பக் கடமைகளிலிருந்து உருவாகியிருக்கலாம். குடும்பத்தில் ஒருவர் கொல்லப்பட்டால் அவரது சாவுக்குக் காரணமானவர்களைப் பழிவாங்குவதற்குக் குடும்பத்தினருக்கு உரிமையும் கடமையும் உள்ளது என பண்டைய மக்கள் நினைத்தார்கள். இத்தகைய பழக்கங்கள் பழங்குடி மக்களுக்கே உரியவை. கொலை செய்தவன் கொல்லப்பட வேண்டும் என்பதுதான் அவர்களின் சட்டம். இரத்தப் பழிவாங்குவோன் இறந்தவரின் உறவினராக இருப்பான். இவ்வாறு இரத்தப்பழி வாங்கும் பழக்கம் நீதித்துறைக்கு ஒரு சவாலாக இருந்தது. அதிகாரத்தில் இருப்பவர்கள் நீதியோடு செயல்படுவதற்குத் தடையாகவும் இருந்தது எனலாம். எனவே ஒரு காலகட்டத்தில் அதிகாரத்தில் இருப்பவர்களே இரத்தப் பழிவாங்குவோன் என்று ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமித்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு நியமிப்பதன் வழியாக குடும்பத்தினரின் பழிவாங்கும் எண்ணங்களும் பின்பற்றப்படுகிறது; அதிகாரத்தில் இருப்பவர்களும் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு வழிபிறக்கிறது. அடைக்கல நகர்களில் தஞ்சம் புகுவது, குற்றம் சாட்டப்பட்டவனை, விசாரணைக்குட்படுத்தி நிதானமாகச் செயல்படுவதற்கும், குற்றம் சாட்டப்பட்டவன் தான் குற்றமற்றவன், நடந்த கொலை தற்செயலாக நடந்தது என்பதை நிரூபிப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இணைச்சட்டம் நூல் அடைக்கல நகர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்றாலும் இச 11:1–13 வரையுள்ள பகுதி அடைக்கல நகர்களைப்பற்றித்தான் பேசுகிறது. அடைக்கல நகர்களின் தொடக்கத்தை அறுதியிட்டுக் கூறுவது கடினம். அடைக்கல நகர்கள் ஒரு மாற்றத்தின் அடையாளத்தைக் கொண்டனவாக உள்ளன. இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறிய சில காலத்திற்குப் பிறகு அவை தொடங்கப்பட்டிருக்கலாம் என ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர். முடியாட்சி காலத்தில் கொலையாளிகளைத் தீர்ப்பிடுவதற்கு, அவை தற்செயலாக நடந்த சாவா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலையா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசு அதிகாரம்பெற்ற நீதிமன்றங்கள் இருந்திருக்கலாம். அந்தச் சூழ்நிலைகளில் அடைக்கல நகர்கள் இனங்களுக்கிடையே எழும்புகின்ற

பழிவாங்கும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு உதவியிருக்கலாம். அடைக்கல நகர்களைப்பற்றிப் பேசுகின்ற இணைச்சட்டம் நூல் அவற்றின் பயன்கள் (19:4-10) மற்றும் அவற்றால் ஏற்படும் முறைகேடுகள் (19:11-13) ஆகியவற்றையும் பதிவுசெய்கிறது. தற்செயலாக ஏற்படும் விபத்தைப் போல ஒருவர் கொல்லப்படலாம். இறப்பிற்கான காரணங்களை அல்லது இறப்பு எப்படி நடந்தது என்பதை அறிந்து கொள்ளாமல் ஒருவரை கொலையாளி என மக்கள் தீர்ப்பிட்டால் அதன் விளைவுகள் மிகவும் மோசமானதாக மாறலாம். அத்தகைய எதிர்வினை பல கொலைகளுக்குக் காரணமாகலாம்; நீதி தேடி காலத்தை விரயமாக்கலாம். குற்றமற்ற இரத்தத்தைச் சிந்துவதும், அதனால் குற்றப்பழி ஏற்படுவதும் நிலம் கையைவிட்டுச் செல்வதற்கும் காரணமாகலாம். அடைக்கல நகர்கள் அமைதியான சூழ்நிலையில் ஒருவர் உண்மையிலேயே குற்றவாளியா? அல்லது குற்றமற்றவரா? என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவி செய்தன. இணைச்சட்டம் நூல் அடைக்கல நகர்களுக்கான இறையியலைப் பதிவு செய்கிறது.

அடைக்கல நகர்கள் பற்றிய செய்திகள் விவிலியத்தில் அதிகமாக இல்லை; ஆனால் பழைய ஏற்பாட்டில் இது ஒரு முக்கிய மையக்கருத்தாக வருகிறது. பிற்காலத்தில் ரபிக்கள் மரபில் அடைக்கல நகர்கள் பற்றிய விரிவான விளக்கங்கள் உள்ளன. உதாரணமாக, அடைக்கல நகர்கள் நீர் நிலைகள், சந்தைகளுக்கு அருகில் இருக்க வேண்டும். இதனால் அங்கே அகதிகளாக வாழ்பவர்களுக்குத் தேவையானவை கிடைக்கும். அடைக்கல நகர் அதிகமான மக்கள் வாழும் மாவட்டங்களில் இருக்க வேண்டும்; அவர்கள் உதவிக்கு அழைக்கும்போது அவர்களின் குரலை அடுத்தவர்கள் கேட்பார்கள். அடைக்கல நகர்களில் ஆயுதங்கள் அல்லது கண்ணிகள் விற்பனை செய்யும் இடங்கள் இருக்கக்கூடாது; ஏனேனில் இரத்தப் பழிவாங்குவோன் இவைகளை எளிதில் வாங்கி பழிதீர்க்க முயற்சிக்கலாம். அடைக்கல நகர்களினால் வருகின்ற பயன்களை ஒரு சிலர் தங்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. முடியாட்சி காலத்திற்கு முந்தைய காலங்களில் நீதிபதிகளாகச் செயல்பட்ட மூப்பர்கள் கொலையாளிகள் தப்பித்துக்கொள்ளாமல் எச்சரிக்கையுடன் செயல்பட்டார்கள். உண்மையான கொலையாளிகள் தப்பிவிடக்கூடாது; அவர்கள் கட்டயாமாகக் கொலைத் தண்டனை பெறவேண்டும்; ஏனெனில் குற்றமற்றவரின் இரத்தத்தைச் சிந்துவது கானான் நாட்டில் இஸ்ரயேலின் இருப்பையே கேள்விக்குறியாக்கியது. இணைச்சட்ட ஆசிரியர்களின் பார்வையில் கொலை செய்தல் போன்ற பாவத்தின் விளைவுகள் கொலையாளியை மட்டுமல்ல அந்தக் கொலையுடன் தொடர்புடைய ஒவ்வொருவரையும் பாதிக்கிறது. குற்றவாளியைத் தண்டிப்பதன் வழியாக அந்தக் குற்றத்திற்கு எதிரான மக்களின் மனநிலை வெளிப்படுத்தப்படுகிறது. குற்றவாளி தண்டனையிலிருந்து தப்ப

முடியாது என்பதும் நிரூபிக்கப்படுகிறது. அடைக்கல நகர்கள் குற்றமற்றவரின் இரத்தம் சிந்தப்படுவதைத் தடுக்கிறது; அதேவேளையில் எவ்விதத்திலும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்புவதையும் அனுமதிக்காமல் காக்கிறது.

ஒருவர் குற்றவாளியா? அல்லது குற்றமற்வரா? என்பதைத் தீர்மானிப்பதற்கு சாட்சிகள் முக்கயத் தேவை. இக்காலத்தில் ஒரு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு பல்வேறு வசதிகள் உள்ளன. தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் கைரேகையை ஆய்வு செய்தல், கண்காணிப்புக் கருவிகளின் உதவிகள் போன்றவை குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்க உதவுகின்றன. பண்டைய சமூகத்தில் இந்த வசதிகள் இல்லை. குற்ற நிகழ்வைக் கண்ணால் கண்ட சாட்சிகள்தான் குற்றங்களை நிரூபிப்பதற்கு உதவினர். விவிலியத்தில் ஒரு குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு இரண்டு அல்லது அதற்குமேல் எண்ணிக்கையில் கண்ணால் கண்ட சாட்சிகள் வேண்டும் (இச 17:6; காண். எண் 35:30). இந்தச் சட்டத்தில் முறைகேடுகள் நடக்க வாய்ப்புகள் ஏராளம். பொய்ச் சாட்சிகள் சதி செய்தால் ஒரு குற்றத்தை நிரூபிப்பது மிகவும் கடினம். குறிப்பாக சமூகத்தில் பெரியவர்களாக, மதிப்பிற்குரியவர்களாகக் கருதப்படுகிறவர்கள் சதி செய்தால் குற்றங்களை நிரூபிப்பது மிகவும் கடினமானது. சூசன்னாவின் கதையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். எனவே இந்தச் சட்டம் ஒரு தற்காப்பு நிலைப்பாட்டுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொய் சாட்சி சொல்பவர்கள், நீதிக்குத் தடையாக இருப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் (இச 19:16-19). பொய்ச்சாட்சி சொல்பவர்கள் குற்றவாளிக்கு கொடுக்கக்கூடிய தண்டனைக்கு இணையான தண்டனையைப் பெற்றார்கள். கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்; உயிருக்கு உயிர் என்று தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. அடைக்கல நகர் ஒன்றில் தஞ்சம் புகுந்தவன் கொலையாளி எனத் தீர்ப்பிடப்பட்டால் இரத்தப் பழிவாங்குவோன் தண்டனையை நிறைவேற்றுவான் (எண் 35:19-21; இச 19:12). ஒருவன்; கொலையாளி எனத் தீர்ப்பிடப்பட்டபின் அவன் ஈட்டுத்தொகை கொடுத்து தப்பமுடியாது (எண் 35:31-32). பண்டைய மேற்காசிய நாடுகளில் அதற்கான வாய்ப்புகள் இருந்தன. உதாரணமாக, அசீரியர்களின் சட்டத்தில் கொலையாளி ஒருவன் ஈட்டுத்தொகை கொடுத்து குற்றத்திலிருந்து விடுபடமுடியும். இரத்தப் பழிவாங்குவோன் அவனுக்கு மரணதண்டனை வழங்குவதா? அல்லது ஈட்டுத்தொகை பெற்றுவிட்டுவிடுவிப்பதா? என்பதைத் தீர்மானித்துக்கொள்ளலாம்.

நீதித்துறையின் நேர்மையும் உண்மையும் சாட்சிகள் உண்மையுடனும் நேர்மையுடனும் செயல்படுவதைப் பொறுத்துதான் உள்ளது. சாட்சிகளின் நேர்மையில் ஐயம் ஏற்பட்டால் ஆண்டவர் அவரை வழிபடுவதற்காகத் தேர்ந்தெடுக்கும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் அந்த வழக்கு

தீர்த்துவைக்கப்படும். பிற்காலத்தில் எருசலேம் கோவிலில் அமைக்கப்பட்டிருந்த திருச்சங்கம் நீதிமன்றமாகவும் செயல்பட்டது. எருசலேம் கோவிலில் அமைக்கப்பட்டிருந்த திருச்சங்கம்தான் யூதர்களின் உச்சநீதிமன்றமாகக் கருதப்பட்டது. வழக்காடு மன்றத்தில் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் இங்கு பதிவுசெய்யப்படவில்லை. வழக்குகள் நடக்கும்போது பொய்சாட்சி கூறுபவர்கள்; பெறவேண்டிய தண்டனைதான் ஆசிரியர்களின் கவனத்தைப் பெறுகிறது. தங்கள் சகோதரர்களின்மீது பொய்க்குற்றம் சாட்டுபவர்கள் பெறவேண்டிய தண்டனை குற்றத்திற்கான தண்டனைக்கு ஈடாக உள்ளது. அடுத்தவர்களுக்குத் தீமை செய்யவேண்டும் என நினைப்பவர்கள் தீமையைத்தான் அறுவடை செய்வார்கள். தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைப்பவன் வினை அறுப்பான் என்பது முதுமொழி. பொய்சாட்சி கூறுபவர்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். குற்றமற்றவர்கள் தண்டனை பெறக்காரணமாக இருப்பவர்கள் அவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதைக் காண்பார்கள்

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு





அருட்தந்தை.ராபர்ட்
அடைக்கல மாதா ஆலயம், மறவபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்

## திருவருகைக்காலம் 1ம் வாரம் ஞாயிறு - 03.12.2023

எசாயா 63/16-17 64/1, 3-8, 1 கொரிந்தியர் 1/3-9, மாற்கு 13/33-37

# கருணை உன் வடிவல்லவா!

ஓட்டப்பந்தயத்தில் சிறுவன் ஒருவன் எப்பொழுதுமே வெற்றி பெறுவான். அந்த நகரத்தில் நடக்கவிருந்த போட்டியில் கலந்துகொள்ள ஆயத்தமாவான். ஊரில் இருந்த சக சிறுவர்களையெல்லாம் அழைத்து அவனோடு போட்டி வைத்தான். இந்த சிறுவர்கள் பங்கேற்கும் ஓட்டபந்தயத்தைக் காண மக்கள் திரண்டிருந்தனர். முதியவர் ஒருவரும் அந்தப் போட்டியைக் காணச் சென்றிருந்தார். போட்டியானது ஆரம்பித்தது. சிறுவனோ மின்னல் வேகத்தில் இலக்கை அடைந்தான். மக்கள் கரவொலி எழுப்பி வாழ்த்தினார்கள். சிறுவனைப் பாராட்டினார்கள். இரண்டாவது பந்தயமும் ஆரம்பமானது. சிறுவனோ தன்னைவிட வயதினில் மூத்தவர்களையும் பலசாலிகளையும் களம் இறக்கிப் பார்த்தான். போட்டியானது ஆரம்பித்தது. சிறுவனோ சீறிப்பாய்ந்து இலக்கை அடைந்தான். மக்கள் கரவொலி எழுப்பி வாழ்த்தினார்கள். சிறுவனைப் பாராட்டினார்கள். முதியவர் எழுந்து வந்தார். சிறுவனைப் பாராட்டினார். பார்வையற்ற சிறுவனோடும் வயதுமுதிர்ந்த பாட்டியோடும் சிறுவனை ஓட அழைத்தார். போட்டியானது ஆரம்பமானது. சிறுவன் அதிவேகமாக ஓடி இலக்கை அடைந்தான். ஆனால் எவரும் கைகள் தட்டவில்லை. சிறுவனையும் அவர்கள் பார்க்கவில்லை. முதியவரோ சிறுவனை அழைத்து இவர்களது கரங்களோடு கரமிணைத்து இலக்கினை அடையச் செய்தார். கூட்டம் முழுவதும் கண்ணீரோடு கரம் தட்டியது. கருணையை அடிப்படையாக கொண்டதால் திறமைமிக்க சிறுவன் அனைவரின் கண்களிலும் வியப்பாய் மாறிப்போகின்றான். திறமைகளால் அல்ல கருணையால் இவ்வுலகை வெல்லலாம் என்பதை புரிந்து கொள்கின்றான்.

திருவருகைக் காலம் நமக்கு உணர்த்துகின்ற பாடம் இதுதான். கருணைநிறை இறைவன் நம்மைச் சந்திக்க வருகின்றார். இறைவன் எந்த நேரத்தில் நம்மைச் சந்திக்க வருவரோ என எண்ணி ஏங்கித் தவித்த நமக்கு திருஅவை இன்று இறைவன் பிறக்கப்போகும் காலத்தை நிர்ணயித்து அவரின் வருகைக்கு

நம்மையே நாம் தயாரித்துக்கொள்ள நம்மை அழைக்கின்றது. சந்திக்க வருபவர் யார் என்பதை நாம் அறிந்திருந்தால் தான் அவருக்கேற்றவாறு நமது உள்ளத்தையும் இல்லத்தையும் நாம் தயார் செய்துகொள்ளலாம். இவ்வுலகின் அரசராக இருக்க வாய்ப்பிருந்தும் ஆளும் தன்மைகளைத் தன்னகத்தை கொண்டிருந்தாலும் அனைத்துதையும் ஒதுக்கிவைத்துவிட்டு கருணையைத் தன் அனைத்துமாய் இறைமகன் இயேசு தன் கையில் எடுக்கின்றார். ஆம் நமது இறைவன் கருணையே உருவானவர். விண்ணகத்தில் பார்வோன் மீது மோசே வெற்றிகொண்ட நாளை நினைவுகூற வெற்றிவிழாவிற்கு சம்மனசுக்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனரார்களாம். அப்போது அப்பக்கமாக வந்த இறைவன் சம்மனசுக்களைப் பார்த்து: எதற்காக இந்த ஏற்பாடுகள் என்றாராம். அதற்கு சம்மனசுக்கள் மகிழ்ச்சி பொங்க : என்ன ஆண்டவரே! உமக்குத் தெரியாதா? பார்வோனின் வீரர்கள் கடலில் மூழ்கி இறந்துவிட்டார்கள். மோசேயும் அவரது மக்களும் வெற்றிவாகை சூடிவிட்டார்கள். அந்த வெற்றிவிழாவைக் கொண்டாடத்தான் இந்த ஏற்பாடுகள் என்றனராம். அதற்கு இறைவன் வருத்தம் நிறைந்த குரலில் என் மக்கள் அங்கே செத்துக் கிடக்கிறார்கள். இங்கே நீங்கள் வெற்றிவிழா நடத்தப்போகிறீர்களா? என்றாராம்.

ஆம். நமது இறைவன் கருணையே உருவானவர். இதனால்தான் அன்று அவர் தாவீதின் குலத்தில் உதித்தார். இதனால்தான் அன்று அவர் கொலையாளிகளுக்காகச் செபித்தார். இதனால் தான் அன்று அவர் உயிர்த்தபிறகு பெரும்பாவியான மகதலா மரியாளுக்கு முதன்முதலில் தோன்றினார். இதனால் தான் இன்றுகூட அவரது வழித்தோன்றல்கள் வழியாக எல்லையில்லா கருணையைத் தன் மக்கள் மீது பொழிந்து வருகிறார். ஆம். நமது இறைவன் கருணையே உருவானவர். இப்படிப்பட்ட இறைவன்தான் நம்மைச் சந்திக்க வருகிறார். இப்படி நம்மீது இறைவன் கருணையைப் பொழிவதற்குக் காரணம் என்ன? என்பதனை இன்றைய இரண்டாம் வாசகத்தில் பார்ப்போம். நமது இறைவன் பிரிவினையின் இறைவனல்ல மாறாக ஒற்றுமையின் சமாதனத்தின் அன்பின் இறைவன். நாம் வேண்டுமானால் கடவுள் இல்லை என்று சொல்லலாம்! ஆனால் கடவுள் மனிதன் இல்லை என்று சொல்வதில்லை!. நாம் வேண்டுமானால் கடவுளுக்கு எதிராகப்போர் தொடுப்பேன் என்று சொல்லலாம்! ஆனால் கடவுள் மனிதனுக்கு எதிராகப் போர் தொடுப்பேன் என்று சொல்வதில்லை! நாம் வேண்டுமானால் கடவுள் வேண்டாம் என்று சொல்லலாம்! ஆனால் கடவுள் மனிதன் வேண்டாம் என்று சொல்வதில்லை!

காரணம் நமது கடவுள் சமாதானத்தின் கடவுள். அவர் சமாதானத்தை விரும்புவதினால்தான் எல்லையில்லா கருணையை நம்மீது பொழிந்து நம்மை அவரது மக்களாக வாழவைக்க விரும்புகிறார். நம் வீடு தேடிவருபவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடந்துகொள்வதுதானே நாம் நம் வீட்டுக்கு வருபவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும். நமது இறைவன் கருணையே உருவானவர். ஆகவே நமது உள்ளங்களையும் இல்லங்களையும் கருணையால் நிரப்ப முற்படுவதே நம்மைச் சந்திக்கவரும் இறைவனின் வருகைக்கு நாம் செய்துகொள்ளும் அர்த்தமுள்ள ஏற்பாடாகும். இறைக்கருணையால் கருணையை உலகறியச் செய்வோம். ஆமென்.




# திருவருகை காலம் முதல் ஞாயிறு

எசா. 63: 16–17, 64: 1, 3–8, 1கொரி. 1 : 3–9, மாற். 13 : 33–37

**03-12-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

இறைவனை குழந்தை வடிவில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் திருவருகை காலத்தின் இன்றைய முதல் ஞாயிறுடன் புதியதொரு வழிபாட்டு ஆண்டு தொடங்குகிறது.

நம்பிக்கையின் மெழுகுவர்த்தி ஏற்றி பாலகன் இயேசுவை வரவேற்கக் காத்திருக்கும் அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் திருவருகை காலம் முதல் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

மண் மழைக்காகக் காத்திருக்கிறது. கடல் நதிக்காகக்காத்திருக்கிறது. வைகறை உதயத்திற்காகக் காத்திருக்கிறது. அந்திப்பொழுது நிலவுக்காகக் காத்திருக்கிறது. இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட இறைமக்களாகிய நாம், நம் மீட்பராம் இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கிறோம்.

இறைவனைக் குழந்தை வடிவில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நமக்கு, உலகின் முடிவில் இறைவன் மீண்டும் வருவதை நினைவுறுத்தும் நற்செய்தித் தரப்பட்டுள்ளது. விழிப்பாய் இருங்கள், பொறுப்புணர்வுடன் செயல்படுங்கள் என்று இன்றைய வார்த்தை வழிபாடு நம்மை அழைக்கிறது.

காத்திருந்த குள்ளன் சக்கேயு மீட்புப் பெறுகிறான். காத்திருந்த பிறவிக் குருடன் பார்வை பெறுகிறான். காத்திருந்த மார்த்தா மாட்சி பெறுகிறாள். காத்திருந்த கன்னி மரியா காவியமாகிறாள். கர்த்தரின் வருகைக்காய்க் காத்திருக்கும் நாம் அவரை ஏற்று காலத்தை வென்று வாழ்வோம்.

அன்பை ஆடையாக அணிந்து, இதயத்தில் விழிப்பு என்ற தோரணம் கட்டி, இல்லங்களில் நம்பிக்கை என்ற கம்பளம் விரித்து, அன்புச் செயல்கள் என்ற ஒளியேற்றி இயேசுவை வரவேற்க, பாவ வழிகளை விட்டு விலகி புண்ணிய வழியில் பயணிக்க இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

திருவருகை காலத்தின் அடித்தளமாக விளங்கும் நம்பிக்கை பற்றி இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற கருத்தும் இவ்வாசகத்தில் இழையோடுகிறது. பாவச்சேற்றில் முற்றாக மூழ்கும் வேளையில் இஸ்ரயேல் மக்கள் இறைவனைக் கூவியழைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தின் முன்னுரையிலிருந்து இன்றைய இரண்டாம் வாசகம் அருளப்பட்டுள்ளது. கொரிந்தியர்கள் கடவுளின் அருளைப் பெற்று வாழ்வதைக் கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார். அம்மக்களைப் பாராட்டி நம்பிக்கை ஊட்டுகிறார். கடவுள் நம்பிக்கைக்கு உரியவர் என்பதை உறுதிப்படுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.


## மன்றாட்டுகள்

1) எரியும் புதரில் மோயீசனை, வீசும் காற்றில் எலியாவை, இடியின் ஒலியில் பவுலை அழைத்த இறைவா, தாயின் கருவில் இருக்கும்போதே நீர் பெயர் சொல்லி அழைத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர், அருட்கன்னியர் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். அவர்கள் விழிப்போடும் ஞானத்தோடும் செயல்பட்டு விசுவாசக் காவலர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) கேருபுகளின் மீது வீற்றிருக்கும் தந்தையே இறைவா, உம் திருமகனும் எம் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நட்புறவில் நாங்கள் பங்கு பெற்று, எந்தத் தீமைகளும் எங்களைத் தீண்டாது, எந்த ஆபத்தும் எங்களை அணுகாது, அலகையின் பாவ வலையில் நாங்கள் சிக்காது விழிப்புடன் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் இருக்கும் இறைவா, கலை நுட்பம் மிகுந்த வித்தகக் குயவனான நீர், வெறும் களி மண்ணாய் இருக்கும் எங்களை உம் திருக்கரத்தால் உம் விருப்பப்படி நேர்த்தியான வேலைப்பாடுகளோடு எம்மை வனைந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) நோய் தீர்க்கும் அருமருந்தே இறைவா, உலக நாடுகள் முழுவதும் பரவிவரும் பல்வேறுபட்ட கொடிய நோய்கள் முற்றிலும் இல்லா தொழியவும், இயற்கையாலும் மனிதராலும் உருவாக்கப்படும் எல்லா அழிவுகளும் இல்லாது போகவும், மக்கள் அனைவரும் உம்முடைய குரலுக்கே செவி கொடுத்து, உம்மைப் பின்பற்றி நலமுடன் வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

நான் இளைஞனாக இருந்தபோது எல்லாம் தெரியும் என நினைத்தேன்.
கொஞ்சம் வயசானபோது கொஞ்சம்தான் தெரியும் என உணர்ந்தேன்.
முதிர்ச்சியடைந்தபோதுதான் தெரிந்தது எனக்கு எதுவும் தெரியாது என்று.
– சாக்ரடீஸ்

நரகம் வெறுமையாக இருக்கு...ஏனென்றால்
எல்லா பிசாசுகளும் இங்குதான் உள்ளன. – வில்லியம் ஷேக்ஸ்பியர்

கடப்பாறைக்கு இடம் கொடாத பாறை
வேருக்கு இடம் கொடுப்பது எப்படி?

நான் தனியாக இருப்பதால், நான் அனாதை என்று அர்த்தமல்ல
நான் வலிமையாக இருக்கின்றேன் என்று அர்த்தம்

மக்கள் உண்மையை ஏற்க மறுப்பதற்குக் காரணம்.
அவர்களுக்குக் சாதகமாக உள்ள பொய்யை விட்டுவிட பயப்படுவதால்.
– ஃபிரடெரிக் நீட்சே

அளவுக்கதிகமாக சிந்திப்பதே பெரும்பாலான
நம் கவலைகளுக்குக் காரணம்.

ஒவ்வொரு வார்த்தைக்கும் பின்விளைவு இருப்பதுபோல
நமது மௌனத்திற்கும் உண்டு. –ஜீன் பால் சார்தே

உங்களுக்கு உரியவை அத்தனையும் இயற்கை நிலையில் எற்கெனவே உள்ளன.
அவற்றை யாரும் பறித்துவிட முடியாது.உங்கள் மனம் பக்குவப்பட, பக்குவப்பட
அவை ஒவ்வொன்றாக உங்களிடம் வந்து சேரும். – வேதாத்திரி மகரிஷி

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாகவே அறிவு என்பதை நாம் பெறுகிறோம். இதற்குரிய பொறிகளான கண், காது, வாய், மூக்கு, உடல் என்னும் ஐந்து உறுப்புகளில் எது குறைந்தாலும் குறிப்பிட்ட ஓர் அனுபவத்தை இழந்து விடுவோம். ஆனால் அனைத்து உயிரினங்களுக்கும் இந்தப் புலன் அறிவுகள் எல்லாம் இருப்பதில்லை இதைக் கொண்டு உயிரினங்களைப் புலன்களின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னோர் பகுத்தனர். ஆறாவது அறிவு மனத்தால் அறியப்படுவது என்பர்.

இதனைக் குறித்த பாடல் இதோ:

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே
அதனோடு நாவே மூன்றறிவு வதுவே
அவற்றோடு மூக்கே நான்கறி வதுவே
அவற்றோடு கண்ணே ஐந்தறி வதுவே
அவற்றோடு செவியே ஆறறி வதுவே
அவற்றோடு மனனே நேரிதின்
உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

உயிர் வகைகளில் விரிவு:

ஓரறிவு – உற்றறிதல் (தொடுதல் உணர்வு) அதன் இனம் – புல்இ மரம்.

ஈரறிவு – உற்றறிதல் மற்றும் சுவைத்தல். அதன் இனம் – சிப்பிஇ நத்தை.

மூவறிவு – உற்றறிதலும், சுவைத்தலும், நுகர்ந்தலும். அதன் இனம் கரையான், எறும்பு.

நான்கறிவு – உற்றறிதலும்,சுவைத்தலும், நுகர்தலும், காணுதலும். அதன் இனம் – நண்டு, தும்பி.

ஐந்தறிவு – ஊற்றறிதல், சுவைத்தல், நுகர்தல் காணல், கேட்டல். அதன் இனம் பறவை, விலங்கு.

ஆறறிவு என்பது உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் (மனம்). அதன் இனம் மனிதன்.

இதனை எழுதியவர் தொல்காப்பியர். தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கண நூல்களுக்கு முதல் நூலாக அமைந்திருக்கிறது. இது எழுத்து? சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது. இந்நூலில் பல அறிவியல் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாகப் பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பதை அயல்நாட்டு அறிஞர்களும் வியந்து போற்றுகின்றனர். இது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.

நம் விவிலியத்தில், தொடக்க நூல் முதலாம் அதிகாரத்தில் ஆண்டவர் உலகைப் படைத்த அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. படிக்கும் வாய்ப்பை உருவாக்கி வாசித்து ஆண்டவரை மகிமைப்படுத்துவோம்.

இயேசுவுக்கு மகிமை.

நன்றி.

லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 72

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு



### குறள் விளக்கம்

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்பு உடையவர் தம் உடைமையும் பிறர்க்கு உரியதாக்கி வாழ்வர்.

### சிந்தனை

தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அந்தப் பெண்ணுக்கு. உணவகம் ஒன்றில் ஒரு தோழிக்காகக் காத்திருந்தார். மற்றவர்கள் பார்வையில்படுவதில் அவளுக்கு மிகுந்த கூச்சம். நகம் கடித்து நடுங்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். தூரத்து மேசையில் அமர்ந்திருந்த ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தார். பணிப்பெண்ணை அழைத்து ஏதோ சொன்னார். அதற்குள் அந்தப் பெண்ணின் தோழியும் வந்து சேர்ந்தார். சாப்பிட்டு முடித்ததும் பில் கேட்டார்கள். ஒருவர் பணம் கொடுத்துவிட்டு ஒரு குறிப்பையும் தரச் சொன்னதாய்ப் பணிப்பெண் சொன்னார். அதில் பெண்ணே! உன் கண்கள் ஒளி நிரம்பியவை. உன் புன்னகை கவர்ச்சியானது. நிமிர்ந்து இந்த உலகைப் பார் மலர்ந்து சிரி. நீ இந்த உலகை அழகாக்கப் பிறந்தவள் என்றிருந்தது. அந்தத் துண்டுச்சீட்டு தந்த நம்பிக்கை அந்தப் பெண்ணின் வாழ்வையே மாற்றியது.

தாய் தன் குழந்தைக்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கிறாள். தன் பிள்ளைக்குக் கண்பார்வை இல்லை என்றால் தன் கண்ணையே தானமாக வழங்குகிறார். தன் உறுப்புகளைத் தானமாக வழங்க முன்வருவார். பிறரன்பு மிகுந்தவரே இரத்த தானம் செய்ய முன்வருவர். தன்னிடம் உள்ளவற்றிலிருந்து பிறருக்கு வழங்கி மகிழ்ந்திருப்பர். அவர் பகிரும் அளவு பெரிதல்ல அவரது பகிர வேண்டும் என்ற மனநிலை உயர்ந்தது. அன்பு உடையவர் தங்களுடைய எலும்பு, உடல் முழுக்க வழங்குவர். அதாவது தனக்கு என உரியதையும் பிறருக்குக் கொடுக்க முன்வருவர்.

அன்பு இல்லாதவர்கள் எல்லாவற்றையும் தனக்கென வைத்துக் கொள்வர். சுயநலம் உள்ளவர்களிடம் பிறரன்பு இராது. பிறரிடம் இருப்பவற்றையும் தனக்கென கொள்ள அவர் மனம் ஏங்கும். மக்களிடையே பொருளாதார சமநிலை இல்லாமல் இருப்பதற்கு பற்றாக்குறை காரணமல்ல, பகிராத குறையே காரணம் என்பர் அறிஞர். செல்வம் ஓரிடத்தில் குவிந்திருப்பதற்கும் மற்றொரு இடத்தில் இல்லாமல் இருப்பதற்கும் அன்பின்மையே காரணமாகும்.

இறைவனின் அன்பு எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்றது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார். யோ 3:16. கடவுள் மனுக்குலத்தின் மீது கொண்ட எல்லையற்ற அன்பு அவர் மகனையே சிலுவையில் பலியாக்கத் துணிந்தது. பிறரன்பில் பலவகை உண்டு. அதில் உயர்வாக சிவவை தியாக அன்பு உள்ளது.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm